Registered as a Newspaper

# உதயன்

UTHAYAN

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத வூ ஐப்பசி மீ 07 உ புதன்கிழமை (24 - 10 - 1990) ஹிஜ்ரி 1410 ற. ஆகிர் 04 கதிர்: 231

## அத்வானி கைது! புதுடில்லியில் பெரும் அரசியல் நெருக்கடி!!

# பெரும்பான்மை ஆதரவு

# வி.பி.சிங் அரசு இழந்தது!



## பாரதீய ஜனதா கட்சி வழங்கிய ஒத்துழைப்பு வாபஸ் என அறிவிப்பு

புதுடில்லி, அக். 24

சர்ச்சைக்குரிய ராமஜன்ம பூமியில் (அயோத்தியில்) ராமர் கோவில் கட்டுவேன் என்று கங்கணம் கட்டிக்கொண்டு ரத யாத்திரை புறப்பட்ட பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் லால்கிஷன் அத்வானி நேற்றுக் காலை பீஹாரில் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து வி. பி. சிங்கின் தேசிய முன்னணி அரசுக்கு (வெளியில் இருந்தவாறே) வழங்கி வந்த ஆதரவை பாரதீய ஜனதாக் கட்சி திடீரென வாபஸ் பெற்றுக்கொண்டது. இதனால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவை வி. பி. சிங்கின் அரசு இழந்தது.

அரசு பெரும்பான்மை ஆதரவை இழந்ததை அடுத்து புதுடில்லியில் புது அரசியல் நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன.

1989 நவம்பரில் நடைபெற்ற நாடாளுமன்றத்தேர்தல்களில் அறுதிப் பெரும்பான்மைப் பலத்தைப் பெறாத தேசிய முன்னணி (ஐந்து கட்சிகள் கூட்டமைப்பு பின்னர், கம்யூனிஸ்ட் கட்சிகளினதும், பாரதீய ஜனதா கட்சியினதும் ஆதரவுடன் மத்தியில் ஆட்சியை அமைத்தது தெரிந்ததே.

எல். கே. அத்வானி கைதானதை அடுத்து பாரதீய ஜனதாக் கட்சியின் தூதுக்குழு ஒன்று அடால் பிஹாரி வாஜ்பாய் தலைமையில் நேற்று நண்பகல் ஜனாதிபதி வெங்கட்ராமனைச் சந்தித்தது.

தேசிய முன்னணி அரசுக்கு

[4-ஆம் பக்கம் பார்க்க]

### ராஜீவ் விரைவு

எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான திரு. ராஜீவ்காந்தி தனது வெளிமாநில சுற்றுப் பயணத்தை ரத்துச்செய்துவிட்டு புதுடில்லிக்கு நேற்று விரைந்தார்.

இதேவேளை—

இந்திரா காங்கிரஸ் தூதுக்குழு ஒன்று நேற்று இரவு ஜனாதிபதி வெங்கடராமனைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியது. (உ-எ)

### ரத்து!

அயோத்தியில் 'பிரச்சினைக்குரிய காணியை சுவீகரித்து இந்திய அரசு வெளியிட்ட அவசரச் சட்டம் நேற்று ரத்துச் செய்யப்பட்டது. (உ-எ)

### காங்கிரஸ் வரவேற்பு

பாரதீய ஜனதா கட்சித் தலைவர் அத்வானியின் ரத யாத்திரையை நிறுத்தி, அவரைக் கைது செய்த வி. பி. சிங் அரசின் முடிவை இந்திரா காங்கிரஸ் வரவேற்றுள்ளது.

நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும், நிலைநாட்ட எடுக்கப்படும் எந்த நடவடிக்கைக்கும் கட்சியின் ஆதரவு இருக்கும் என்று இந்திரா காங்கிரஸ் உத்தியோகபூர்வமாகத் தெரிவித்தது.

### தடை!

புதுடில்லி, அக். 24

உத்தரப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட இருந்த ரதயாத்திரை, மற்றும் அயோத்தியில் ராமர் ஆலய கட்டுமான வேலைகள் அனைத்தையும் தடைசெய்து உத்தரப் பிரதேச மாநில அரசு உத்தரவு ஒன்றை நேற்றுப் பிறப்பித்தது. (உ-எ)

### பெரும்பான்மையை நிரூபிக்க

## மூன்று வார கால அவகாசம் கேட்கிறார் வி. பி. சிங்

புதுடில்லி, அக். 24

நாடாளுமன்றத்தில் தனது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க மூன்று வார கால அவகாசம் தருமாறு பிரதமர் வி. பி. சிங் இந்திய ஜனாதிபதி வெங்கடராமனைக் கேட்டிருக்கிறார்.

நேற்று நண்பகலுக்குப் பின்னர் ஜனாதிபதியைச் சந்தித்த போதே திரு. சிங் இக்கோரிக்கையை முன் வைத்தார்.

இக்கோரிக்கை குறித்தும், பாரதீய ஜனதா கட்சி தேசிய முன்னணி அரசுக்கான ஆதரவை வாபஸ் வாங்கியுள்ளதைத் தொடர்ந்து எழுந்துள்ள அரசியல் நெருக்கடி பற்றியும் அரசமைப்புச் சட்ட நிபுணர்களுடன் ஜனாதிபதி தீவிர ஆலோசனை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

பாரதீய ஜனதாக் கட்சி ஆதரவை விலக்கிக் கொண்டாலும் தேசிய முன்னணி அரசுக்கு அறுதிப் பெரும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## விருந்தினர் மாளிகையில் அத்வானி தடுத்து வைப்பு

பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் எல். கே. அத்வானி பீஹார் மாநிலத்தில் உள்ள சமஸ்திபுர என்னுமிடத்தில் வைத்து நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார்.

அவருடன் சேர்த்து கட்சியின் மூன்று எம். பிக்களும், ஒரு எம். எல். ஏயும் கைது செய்யப்பட்டனர்.

அத்வானியும் அவருடன் கைதானவர்களும் பீஹார் மாநிலத்தில் துல்கா மாவட்டத்தில் உள்ள விருந்தினர் மாளிகையில் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர். [உ-எ]

## இந்தியாவில் ஹர்த்தால்

புதுடில்லி. அக். 24

திரு. அத்வானி கைதானதை ஆட்சேபித்து இன்று புதன்கிழமை ஹர்த்தால் ஒன்றுக்கு பாரதீய ஜனதாக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

இதனைத் தொடர்ந்து மாநில அரசுகள் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தியுள்ளன.

இதேவேளை — திரு அத்வானி கைதானதைக் கண்டித்து வடஇந்திய மாநிலங்களின் சில பகுதிகளில் வன்செயல்கள் வெடித்தன.

குஜராத் மாநிலத்தில் அஹமதபாத்தில் ஒருவர் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார்.

கட்டுக்கடங்காத கூட்டத்தைக் கலைக்க ஆங்காங்கே பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

சில நகரங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (உ-எ)

## பலாலி முகாம் மோதல்களில் 15படையினர் திங்களன்று பலி

தெல்லிப்பளை, அக். 24

வயாவிளான், மாவிட்டபுரம், கட்டுவன், குரும்பசிட்டிப் பகுதிகளில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற மோதல்களில் பதினைந்துக்கும் அதிகமான படைச் சிப்பாய்கள் உயிரிழந்தனர். அதிக எண்ணிக்கையான சிப்பாய்கள் படுகாயமுற்றனர்.

விடுதலைப் புலிகள் வட்டாரங்களில் இருந்து இத்தகவல் தெரியவந்தது.

திங்கள் இரவு கடும் பொம்மர், ஹெலித்தாக்குதல்களை நடத்தியவாறு - கவரக வாகனங்கள் சகிதம் - முன்னேற முற்பட்ட படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களிலேயே இச்சிப்பாய்கள் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம் நேற்று அதிகாலையும் பல முனைகளில் முன்னேற முயன்ற படையினர் மீது புலிகள் பெரும் தாக்குதலைத் தொடுத்ததாகத் தெரியவந்தது.

கட்டுவன் சந்தியில் ஞானோதயா வித்தியாலயம், வைர

[4 ஆம் பக்கம் பார்க்க]

### வங்கிகளுக்கு மின்சாரம்

யாழ்ப்பாணம், அக். 24

யாழ். நகரில் இயங்கும் சில வங்கிகளுக்கு நேற்று மின்சார விநியோகம் வழங்கப்பட்டது.

ஸ்ரான்லி வீதியிலுள்ள வங்கிகளுக்கும், கன்னாதிட்டியிலுள்ள மக்கள் வங்கிக்கும் மின்சார விநியோகம் கிடைத்தது.

இதேவேளை கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி உட்பட பெரிய கடையின் சில பகுதிகளிலுள்ள பாவனையாளர்களுக்கும் மின்சாரம் கிடைத்தது. (ஒ-6)

### ஊரடங்கு நீக்கம்

கொழும்பு, அக். 24

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவைத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டு விட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கிறது. (ஒ-எ)

## திங்கள் நடந்த மோதலில் ஆறு புலிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், அக். 24

நேற்று முன்தினம் (திங்கள்) வலி. வடக்கில் இடம்பெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் ஆறு பேர் வீரமரணம் அடைந்தனர்.

இவர்களுடன் சேர்த்து பலாலி இராணுவ முகாம் சுற்றாடலில் கடந்த தீபாவளியன்று ஆரம்பமான இராணுவ நடவடிக்கைகளை அடுத்து இடம்பெற்றமோதல்களில் உயிரிழந்த போராளிகளின் எண்ணிக்கை 35 ஆக

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கிளிநொச்சி ஆஸ்பத்திரி மீண்டும் பழைய இடத்தில்!

கிளிநொச்சி, அக். 24

கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரி சுமார் 4 மாத இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் இன்று புதன்கிழமை தொடக்கம் நகரில் பழைய இடத்திலேயே இயங்க உள்ளது.

இராணுவத் தாக்குதல்களை அடுத்து கடந்த ஜூன் 13ஆம் திகதி இந்தஆஸ்பத்திரி மூடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த இடைக்காலத்தில் முரசுமோட்டை மிஷன் வைத்தியசாலையில் கிளிநொச்சி ஆஸ்பத்திரி இயங்கி வந்தது. (ஒ-76)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

## விற்பனைக்கு

மூன்று பொமனேரியன் பெண் நாய்க் குட்டிகள் (50 நாட்கள்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- திருமதி த. இராஜகஸ்தூரி, 175/3 ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம் (தொடர்பகத்திற்கு அருகாமையில்) (14536)

## கல்வி

பழைய/புதிய கொம்பியூட்டர் பிரிவுகளும், Shorthand & Typing (English), C. I. M. A. I.D.P.M, I. A. B வகுப்புக்களும், விரைவில் ஆரம்பமாகவுள்ளன. விபரங்கள் நேரில்: தினசரி 9.00 - 12.00 மணிவரை: School Of Business Administration, 16, 3rd Cross Street, Jaffna. [சி-5328]

## தேவை

வெற்றுச் சிமென்ட் பாக்குகள் கோழித்தீன் பாக்குகள், லக்ஸ்பிறே றப்பர் பாக்குகள் தேவை. மில்க் வைற் யாழ்ப்பாணம். (சி/5337)

## முடிவல்ல ஆரம்பம்

மீராவெளியீடு சிதம்பரச் திருச்செந்திநாதன் எழுதியது 'இங்கு சண்டை பிடிக்காட்டி எங்களை வெளிநாட்டில் இருக்க விடுவன்களே' இப்படிச் சொல்லும் சுயநல மனோபாவமுடைய கந்தசாமியை இந்நாவலில் சந்தியுங்கள். ஸ்ரீ காந்புத்தகசாலை நல்லூர் துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம் திருக்கணிதம் சாவகச்சேரி பிக்பென்ஸ்(B) கிளிநொச்சி. (14561)

## நியூவிக்ரேஸ்

நியூ விக்ரேஸ் ஸ்தாபனம் வழமை போல் இயங்குகின்றது. வாடிக்கையாளர்கள் தொடர்புகொண்டு பொருள்களை பெற்றுக் கொள்ளலாம். காலை 8 . 30 தொடக்கம் 12 - 30 மணிவரை தொடர்பு கொள்ளலாம். (14532)

## கிளீன் கட் போட்டோஸ்ரற்

தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளை உடனடியாகப் பெற்றுக் கொள்ளவும். அடையாள அட்டைகட்கு கவரிட்டு கொள்ளவும் கிளீன் கட் 37, சிவகுருநாதர் வீதி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் யாழ் இந்து மகளிர் சந்திக்கு அண்மையில். (14523)

## TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் வேலைக்கும் Fudo Enterprises. பிரதான வீதி, மானிப்பாய், Bank - Siva studio அருகாமையில். [சி-5219)

## கல்வி

செம்மணி லேனில் அமைந்திருக்கும் "சோதிட இல்லத்தில்" சோதிடமும் கொழும்பு றோயல் கல்லூரியில் பயின்றவரால் 6ம் தரம் முதல் வாலிபர், யுவதிகளுக்கும் சிறந்த இலகுவான முறையில் English. Spoken English கற்றுத்தரப்படும் வீடுகளுக்குச் சென்றும் கற்பிக்கப்படும். உடன் தொடர்பு:- குலசபாநாதன் 15, செம்மணி லேன் (தபால் கட்டை சந்திக்கு அருகில்) அரியாலை. யாழ்ப்பாணம். (14541)

# காணவில்லை



## மரியாம்பிள்ளை செபரெட்ணம்

[வயது: 42]

வசாவிளானைச் சேர்ந்தவரும், 43, D8 உருத்திரபுரத்தில் வசிப்பவரும், யாழ். கூட்டுறவு திணைக்களத்தின் பிரதம லிகிதராகப் பணிபுரிபவருமான இவர் கடந்த ஜூலை மாதம் 20 ஆம் திகதி மிருசுவிலிலிருந்து கிளிநொச்சிக்கு சைக்கிளில் புறப்பட்டுச் சென்றார். இவரது அடையாள அட்டையிலுள்ள முகவரி இல.43 கண்டி வீதி. யாழ்ப்பாணம். இவரைப் பற்றிய தகவல் ஏதும் தெரிந்தால் தயவுசெய்து இவரின் சகோதரர் களுடன் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். அருட்சகோதரி கொன்சீலியா, அருட்சகோதரி பரியா, திருச்சிலுவை கன்னியர்மடம், கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

M- E. வேதானந்தம்.

1125 திருநகர்,
கிளிநொச்சி. (14543)

# ஆயுள்வேத வைத்தியத்துறை விருத்தி

# கலந்துரையாடல்

இடம்:- பிரதேச சபைக் காரியாலயம், கொக்குவில்.

காலம்:- 25 - 10 - 90 காலை 9.00 மணி

அழைக்கப்படுவோர்:- சகல உள்ளூராட்சி மன்ற ஆயுள்வேத வைத்தியர்கள் யாழ். மாவட்டம் - மற்றும் இதில் ஆர்வம்கொண்டோர் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்,

சு. டிவகலாலா

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்.மாவட்டம். (சி/5333)

உ
சிவமயம்

# அழைப்பு

வேலணைக் கல்விக்கோட்டக்கல்வி அதிகாரியாகவும். வேலணை சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி ம. ம. வித்தியாலயத்தை மூலாதார பாடசாலையாகக்கொண்ட வேலணைக் கொத்தணியின் அதிபராகவும் இருந்த

அமரர்

## த. சண்முகநாதன் B. Sc. S.L.E.A.S

அவர்களின்

ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்,
உருவப்படத் திரைநீக்கமும்,
நினைவுமலர் வெளியீடும்.

இடம்:- சேர். வை. து. ம.ம வித்தியாலயம்.வேலணை.
காலம்:- 25 10 1990 வியாழன் காலை 10மணி
அழைப்பு:- அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

பொ. கேதாரநாதன்
கொத்தணி அதிபர் வேலணை,
விழாக்குழுவின் சார்பில்.

(14542)

# ஓராம் ஆண்டு நினைவஞ்சலி



## இருஷ்ணபிள்ளை. கதிரவேலு

(பொன்னுத்துரை)

திதி: 24 - 10 - 1990

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு திடீரென அணைந்த எம் அன்புத்தெய்வமே எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்

மனைவி, மக்கள், மருமக்கள்,
பெறாமக்கள் பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

6 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு. (14454)

# இராம சேவையாளர் கூட்டம்

தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த கிராம சேவை உத்தியோகத்தர்கள் கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கிராமசேவை உத்தியோகத்தர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (இ)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
05 - 10 - 1912

உதிர்வு:
14 - 11 - 1988

திதி:
24 - 10 - 1990

## திரு. சின்னத்தம்பி நல்லையா

எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு அணைந்த ஐயா எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும் உங்கள் நினைவு எம்மைவிட்டு என்றும் அகலாது உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்:

195, சிவன்பண்ணை வீதி,
யாழ்ப்பாணம். (14540)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## சாமுவேல் அருமைநாயகள்

தோற்றம்:
28 - 11 - 1938

மறைவு:
24 - 09 - 1990

நாடகத்தில் நடிக்கத் தெரிந்
-தவன்
நானிலத்தில் நடிக்கத் தெரி
-யாதவன்
என் அருமை மாணவன்
-அருமைநாயகன்
அகால மரணத்தால் அமரன்
[illegible]

(சி-5338)

# மரண அறிவித்தல்

## திருமதி. தி. சிவபாக்கியம்

(கெருடாவில்)

கெருடாவில் வாசியாகிய திருமதி திருநாவுக்கரசு சிவபாக்கியம் 18-10- 1990 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற திருநாவுக்கரசின் அன்பு மனைவியும், சின்னையா லட்சுமிப்பிள்ளை ஆகியோரது புதல்வியும், சின்னத்தம்பி பாக்கியம் ஆகியோரது மருமகளும் சிவகுமார் (மே. ஜேர்மனி) நந்தகுமார் (சுவிட்சர்லாந்து), சந்திரகுமார் (இந்தியா) திருநந்தினி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரது அன்புத் தாயாரும் தவராஜா (கனடா), நேசராஜா (மாலைதீவு), நல்லையா, ஞானமலர் (மாலைதீவு) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 18- 10- 1990 அன்று நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர் யாவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்;
தி. திருநந்தினி [மகள்]

கெருடாவில்,
தொண்டமானாறு. (14537)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஸ்கந்தஷஷ்டியின் மனோபலம்

இன்று ஸ்கந்தஷஷ்டி விரதம் நிறைவுறும் நாள் ஆணவத்தையும் அதர்மத்தையும், அநீதியையும் தர்மம் வென்ற நாள் அந்தத் தர்மத்தை நிலைநாட்டுவதற்காக ஒரு பெரும் போரே நடந்தது. அந்தப் போரில் தர்மத்தின் பக்கம் நின்று போராடிய முருகன், பாலகனே. ஆனால் மனோபலம் மிக்கவனாக விளங்கியதால் பலம்மிகுந்த சூரபன்மனை வதைத்தான்,

சூரபன்மனிடம் குடிகொண்ட ஆட்சிச் செருக்கும், அந்தச் செருக்கினால் அவன் கட்டவிழ்த்துவிட்ட அடக்குமுறைகளும், அடாவடித்தனங்களும், அட்டூழியங்களுமே போருக்குக் காலாயின மற்றவர்களின் வாழ்க்கை உரிமைகளை மறுத்து அவன் புரிந்த அக்கிரமங்கள் அளப்பிலாதவை.

தனது உடற்பலத்தினால், ஆட்சிப் பலத்தினால் அதர்மத்தை வளர்த்து மற்றவர்களை அடக்கி ஒடுக்கி வைக்கலாம் என்ற சூரபன்மனின் எண்ணம் தவிடுபொடியானது. கந்தப்பெருமான் போரைத் தொடங்குவதற்கு முன்னர், சமாதான வழியில் நீதியை நிலைநாட்டுமாறு, வீரவாகுதேவர் மூலம் அனுப்பிய தூதை அசுரன் அசட்டை செய்தான். அதன் முடிவு அவன் மட்டுமன்றி அவனது படைகள், மக்கள், - முழு இனமுமே அழிந்தது

ஸ்கந்தசஷ்டியின் இந்தக் கருவூலம் இப்போது நடக்கும் சிங்களவர் - தமிழர் போருக்குச் சமாந்திரமானது. எப்படி...?

சிங்களவர்கள் இந்த நாட்டின் பெரும்பான்மையினர் என்பதால், தாம உடற்பலம்-சனப்பலம் - மிக்கவர்கள் என நினைத்தார்கள் அதனால் அவர்களுக்கு ஆட்சிச் செருக்கு உண்டானது. அந்தச் செருக்கு ஆணவத்திற்கும், அடக்குமுறைக்கும் வித்திட்டது, தாம் ஆளும் இனமாகவும், தமிழர்கள் ஆளப்படும் இனமாகவும் இருக்க வேண்டும் என்ற மமதையைக் கொடுத்தது

அதனால் தமிழர்களை அடக்கி ஒடுக்கி ஆளமுற்பட்டார்கள். நீதி வழி நடவுங்கள், எங்கள் உரிமைகளைத் தாருங்கள் என்று தமிழர்கள் அகிம்சை வழியில், சமாதான வழியில் சிங்களவரிடம் கேட்டார்கள். சிங்களவர்களின் செருக்கும், மமதையும், ஆணவமும் நீங்கிய பாடில்லை தமிழர்களை அடக்கி ஆள்வதும், அட்டூழியம் செய்வதும் நித்தியம், நிரந்தரம் என நினைத்து தமிழர்கள் மீது போர் தொடுத்தனர்.

ஆனால் தமிழர்களோ, அடக்குமுறையில் இருந்து விடுபடவேண்டும், தமக்கு அரசியல் சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்ற தமது இலட்சியத்திலிருந்து பின்வாங்கவில்லை. உரிமைப்போராட்டத்தைத் தொடரவேண்டும் என்ற மனோபலத்தை இழக்கவில்லை. அதனால் தான் பல்லாயிரக் கணக்கான மக்களைக் காலத்துக்குக் காலம் பலிகொடுத்தும், கோடிக் கணக்கான ரூபா பெறுமதியான சொத்துக்களை இழந்தும் தங்கள் உரிமைப் போராட்டத்தைத் தொடர்கிறார்கள்.

இலட்சியத்தின் பாற்பட்ட மனோபலம் குன்றாமல் அது மேலும் வளர வேண்டும்; வளர்க்கப்பட வேண்டும். திரண்ட மனோபலமானது, இன்றில்லாவிடினும் என்றோ ஒருநாள் வெற்றியை ஈட்டித்தரும். அதர்மத்தையும், ஆணவத்தையும், தர்மமும் நீதியும் வென்றோங்கும் என்பது இயற்கையின் நியதி—விதி—என்பதால்.

# 2 ஆம் 3 ஆம் கட்ட உலர் உணவு
# விநியோக கால எல்லை நீடிப்பு

யாழ்ப்பாணம் அக். 24

இடம்பெயர்ந்தோருக்கான 3ஆம் கட்ட இலவச உலர் உணவு விநியோகம் தொழிலின்றி இருப்போருக்கான 2 ஆம் கட்ட இலவச உலர் உணவு விநியோகம் ரூபா. 1500/-க்கு மேற்பட்ட வருமானம் பெறுவோருக்கான 2ஆம் கட்ட, பணத்துக்கான உலர் உணவு விநியோகம் வழங்கும் கால எல்லை இம்மாதம் 26ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு, செ லிங்கநாதன் சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளர்களுக்கும் இது பற்றி அறிவித்துள்ளார்

இலவச உலர் உணவு விநியோகம் பணத்துக்கான உலர் உணவு விநியோகம் அனைத்தையும் 26 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. (இ)

## இன்று சூரசங்காரம்

யாழ்ப்பாணம், அக். 24

ஸ்கந்தஷஷ்டி பூர்த்தி நாளான இன்று, குடாநாட்டில் உள்ள முருகன் ஆலயங்களில் சூரசங்காரத் திருவிழா நடைபெறும். நாளை திருக்கல்யாணம் இடம் பெறும். (அ - 100)

## பதுங்கு குழியில் விழுந்து காயம்

யாழ்ப்பாணம், அக். 24

பொம்மரைக் கண்டு பதுங்கு குழியை நோக்கி ஓடிய பெண் பதுங்கு குழிக்குள் இடறி விழுந்து காயமடைந்தார்.

மல்லாகத்தில் நடந்த சனிக்கிழமை இச்சம்பவம் இடம் பெற்றது.

சம்பவத்தில் காயமடைந்தவர் சிவகுரு இராசேஸ்வரி (வயது17). (இ-15)

## மாவீரர் தினம் ஏற்பாடு பற்றி கூட்டம்

மாவீரர் நாள் ஏற்பாடுகள் சம்பந்தமான கூட்டம் ஒன்று திருநெல்வேலி விவசாய போதனாசிரியர் கல்லூரி மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை காலை 10 00 மணிக்கு நடைபெறும்.

இக்கூட்டத்துக்கு யாழ் மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ. சங்கங்கள், தெங்கு பனம் பொருள் உ. வி. கூ. சங்கங்கள், மற்றும் சகல வகையான கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவுச் சங்க சமாசங்கள், கூட்டுறவு வைத்தியசாலைகள், யாழ் தேசிய கூட்டுறவுச்சபை ஆகியவற்றின் தலைவர்களும், பொதுமுகாமையாளர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். (இ)

## இறுதித் திகதி நாளை

யாழ்ப்பாணம், அக் 24

எதிர்வரும் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி மாவீரர் நாளாகும்.

இதனை ஒட்டி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடத்தும் மாவீரர் தின கலை கலாசாரப் போட்டிகளுக்கான இறுதித் திகதி நாளை வியாழக்கிழமை என்பது குறிப்பிடத்தக்கது.

# சகல பகுதிகளுக்கும் இப்போதைக்கு மின் விநியோகம் சாத்தியமில்லை

யாழ். மாவட்டத்தில் உள்ள நூறு மின்மாற்றிகளுக்கு (டிரான்ஸ்போமர்களுக்கு) ''ஒயில்'' இல்லை. ஆதலால் கிளிநொச்சியிலிருந்து மின்சாரம் கிடைத்தும், குடாநாட்டின் சகல பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கமுடியாதுள்ளது. ''ஒயில்'' கிடைக்கும் வரை இந்த நிலை நீடிக்கும்.

இந்தத் தகவலை மின்சார சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இருந்து 33 கே வி. இணைப்பு மூலம் கிடைக்கும் மின்சாரத்தை குடாநாட்டில் உள்ள சகல மக்களுக்கும் சுழற்சிமுறையில் வழங்கமுடியும்.

ஆனால் ''டிரான்ஸ்போமர் ஒயில்'' பிரச்சினையினால் அதனைச் செய்ய முடியவில்லை.

இலங்கை மின்சார சபை யாழ். பொறியியலாளர் பிரிவில் மட்டும் மொத்தம் 70 மின்மாற்றிகள் உள்ளன ஆனால் அவற்றில் 60 மின் மாற்றிகள் ''ஒயில்'' இன்றிக் கிடக்கின்றன,

தற்சமயம் நகரப்பகுதியில் தட்டாதெரு, ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதிச் சந்தி, அராலிவீதி, கண்ணாபுரம் ஆகிய இடங்களில் உள்ளமின் மாற்றிகளும் -

மானிப்பாய் பகுதியில் மேதர் தேவாலயம், மாட்டியன், நவாலி, ஆனைக்கோட்டை கிராமிய விஸ்தரிப்புத் திட்டம், மானிப்பாய் ஆஸ்பத்திரிஆகிய இடங்களில் உள்ள மின்மாற்றிகளும் -

கோப்பாய்ப்பகுதியில் நாவலடி, இருபாலைச் சந்தி, சுரந்தன், கோப்பாய் ஆஸ்பத்திரி, கோண்டாவில் வ.பி. போ.ச. டிப்போ ஆகிய இடங்களில் உள்ள மின்மாற்றிகளும் -

வட்டுக்கோட்டையில் ஒரு சில மின்மாற்றிகளும் -

மற்றும் வடமராட்சிப் பகுதி மின்மாற்றிகளும்செயற்படக்கூடிய நிலையில் உள்ளன.

இந்த மின்மாற்றிகளுக்கு உட்பட்ட பகுதிகளுக்கே தற்போது சுழற்சி முறையில் மின்சாரம் வழங்கப்படுகின்றது.

- இப்படி அந்த அதிகாரி மேலும் கூறினார். [உ-3]

## வர்த்தக வங்கிகளில்
# டினாருக்கு ரூ. 26.25 மட்டும்

கொழும்பு, அக். 24

வளைகுடாவில் இருந்து இலங்கை திரும்பியவர்கள் தம்மிடம் உள்ள குவைத் டினார்களை வர்த்தக வங்கிகள் மூலம் மாற்றுவதற்கு மத்திய வங்கி ஏற்பாடுகளைச் செய்துள்ளது. ஒரு குவைத் டினாருக்கு 26 ரூபா 25 சதம் வழங்கும்படி வர்த்தக வங்கிகளுக்கு மத்தியவங்கியினால் பணிப்புரை வழங்கப்பட்டிருக்கிறது.

வளைகுடா நெருக்கடி தொடங்குவதற்கு முன் ஒரு குவைத் டினாரின் பெறுமதி இலங்கை நாணயத்தில் 130 ரூபாவாக இருந்தது.

ஈராக்கினால் குவைத்தைப்பற்றப்பட்டுள்ள இன்றைய நிலையில் குவைத் டினாருக்கு உண்மையில் ஒரு சதமும் பெறுமதி கிடையாது என்று மத்தியவங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போதைய ஒழுங்கு முறைப்படி டினார் 26 ரூபா 25 சதப்படி ஒருவர் 10 ஆயிரம் ரூபாவரை வர்த்தக வங்கிகளில் மாற்றிக் கொள்ள முடியும்.

அதுவும் வளைகுடா நெருக்கடி தொடங்குமுன் குறைந்தது ஆறு மாதங்கள் குவைத்தில் தங்கி இருந்தவர்களும், குவைத்தில் இருந்து வந்ததுக்கான அத்தாட்சிகளைச் சமர்ப்பித்தவர்களும் மட்டுமே குவைத் டினாரை மாற்றிக் கொள்ள முடியும்.

குவைத்திலிருந்து சமீபத்தில் இலங்கை திரும்பிய பலரும் டினாருக்கு 100 ரூபா வரை எதிர்பார்த்தனர்என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

# யாழ்ப்பாண வங்கிகளுக்கு பணிப்புரை எதுவுமில்லை

யாழ்ப்பாணம், அக். 24

குவைத் டினாரைமாற்றிக் கொடுப்பது சம்பந்தமான எதுவித பணிப்புரையும் தமக்கு கொழும்பிலிருந்து வரவில்லை எனவும்-

அதனால் யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக வங்கிகளில் குவைத் டினார் மாற்றிக் கொடுக்கப்படமாட்டாது எனவும்-

[illegible] வர்த்தக வங்கிகள் நேற்றுத் தகவல் தெரிவித்தன. (இ - 6)

## திரிசாரணர் கூட்டம்

யாழ்ப்பாணம், அக். 23

யாழ்ப்பாணம் திரிசாரணர்களுக்கான அவசர கூட்டம் இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு கனகரத்தினம் மாகாவித்தியாலயத்தில் நடைபெறும். (இ-3)

# கந்தபுராணக் கருவூலம்

### சேவலும் மயிலும்

சூரன் பதுமன் என்னும் இரண்டு பூதர்கள் விண்ணில் உலாவும் கருடன் முதலாய ஊர்திகளுக்கு இடையூறு செய்தமையால், சுப்பிரமணிய சுவாமியினால் அசுரராகப் பிறக்குமாறு சபிக்கப் பெற்றனர். சாபம் பெற்ற இருவரும் (சூரன், பதுமன்) ஒரு உடல் கொண்ட சூரபன்மனாகப் பிறந்தனர். இந்த நிகழ்ச்சியை ''இருபேர் உருவின் ஒரு பேர் யாக்கை'' என நக்கீரதேவர் திருமுருகாற்றுப் படையின், திருப்பரங்குன்றப் பாடலில் விபரித்துள்ளார்.

சூரபன்மன் காசிய முனிவருக்கு மாயையின் வயிற்றிற் பிறந்தான். மாயையின் உபதேசப்படி, சிவபிரானை நோக்கிப்பதினாயிரம் ஆண்டுகள் வேள்வி செய்து, பிருதுவியிலுள்ள ஆயிரங்கோடி அண்டங்களுள் ஆயிரம் அண்டங்களை நூற்றெட்டு யுகம் ஆளும் ஆணையையும், என்றும் அழியாத வலிமை படைத்த தேகத்தையும், அளவற்ற செல்வங்களையும் வரமாகப் பெற்றான். ஆணவ சொரூபியான சூரபன்மன் தேவர்களை ஏவலர்களாக்கியும், சிறையிலிட்டும் துன்புறுத்தினான்.

சூரபன்மனின் கொடுமையைத் தாங்கொணாத அரி பிரமேந்திராத் தேவர்கள் தங்கள் இடுக்கண்ணைக் களைந்து, காத்தருளுமாறு சிவபிரானை வேண்டினர்; ''சூரபன்மனை அழிக்கவல்ல ஒரு புதல்வனை விரைவில் தந்தருளுவோம்; வருந்தாதீர்கள்'' என அபயமளித்தார் சிவபிரான்.

ஆதியில் சூரனுக்கும் பதுமனுக்கும் சாபம் கொடுத்த சுப்பிரமணிய சுவாமியையே. சூரசம்ஹாரத்துக்காக, முருகனாகத் தோற்றுவிக்கத் திருவுளங் கொண்டார் சிவபிரான். (சாபமிட்டவரே சாப நிவர்த்தியையும் அருள வேண்டும் என்பது [illegible]யதி) நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு அக்கினிப் பொறிகளை உற்பவித்து, அவற்றை சரவணப் பொய்கையில் சேர்ப்பித்து, உலகம் உய்யும் வண்ணம் கந்தவேளாக உதிக்கச் செய்தார்.

முருகவேளைப் போர்க்களத்தில் சந்தித்த சூரபன்மன் ''பால் மணம் மாறாத பாலகன் என்னை வெல்ல வல்லவனா'' எனச் சிரித்து எண்ணிறைந்த மாயங்களைச் செய்து போர் புரிந்தான். இறுதியில் ஆறுமுகப் பெருமான் ஏவிய வேற்படை ஆயிரம் கோடி சூரியர் போன்று, ஒளியைப் பரப்பி தீப்பிழம்பை உமிழ்ந்து, சூரபன்மனுடைய மாயங்கள் அனைத்தையும் அழித்தது. தனது மாயைகள் அனைத்தையும் அழித்து விட்டு வேற்படை எதிரே வருவதைக் கண்ட சூரபன்மன் சமுத்திர நடுவே சென்று விண்ணளாவிய ஒரு மாமரமாக உருவெடுத்துக் கிளைகளை அசைத்து ஆரவாரம் செய்தான்.

வேற்படை சீற்றத்துடன் மிகவேகமாகச் சென்று ஆணவத்துடன் ஆரவாரம் செய்த சூரபன்மனாகிய மாமரத்தை இரு கூறாக்கியது. கூறின் ஒரு பாதி சேவலாகவும், மற்றொருபாதி மயிலாகவும் மாறி மீண்டும் வலிமையுடன் போர் புரிய வந்ததை அண்ணுற்ற கந்தவேள், சூரனையும் பதுமனையும் ஆட்கொள்ளத் திருவுளங் கொண்டு. அருள் பொழிகின்ற திருக்கண்ணோக்கம் செய்தலும் அவை பகைமையும் ஆணவமும் நீங்கி தெளிந்த சிந்தையுடன் சரவணபவனைச் சரணடைந்தன. முருகவேள் சேவலைத் தனது கொடியாகவும், மயிலை வாகனமாகவும் ஏற்றுத் திருவருள் புரிந்தார்.

சூரபன்மனின் மார்பைத் துளைத்த நெடுவேல் அனல் வடிவமும், வெப்பமும் மாறத் தேவ கங்கையில் மூழ்கிப் புனிதமடைந்து மீண்டும் செவ்வேளின் திருக்கரத்தில் அமர்ந்தது.

மூவிருமுகங்கள் போற்றி முகம் பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறு தோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றியன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி

-அழகு அருணாசலம்-

**ஸ்கந்தசஷ்டி சிறப்பம்சம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவியை காப்பாற்ற முயன்ற கணவரையும் பாம்பு கடித்தது

தென்மராட்சி, அக். 24

பாம்பு கடித்ததால் மயங்கிய நிலையில் இருந்த மனைவியை வண்டில் ஒன்றில் ஏற்றி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல முயன்ற கணவனுக்கும் பாம்பு கடித்தது.

இருவரும் லொறி ஒன்றில் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இச்சம்பவத்தில் கர்ப்பிணியான மனைவி சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் மரணமானார்.

நகுலாம்பிகை [வயது 21] என்னும் மூன்று பிள்ளைகளின் தாயாரே மரணமானவர் ஆவார். கணவரான எஸ். சந்திரன் [வயது 25] சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கடந்த சனிக்கிழமை இரவு சாவகச்சேரி பெரிய மாவடியில் இச்சம்பவம் நடந்தது.

மனைவிக்குப் பாம்பு கடித்து அவர் மயங்கிய பின்னரே அதுபற்றித் தெரிந்த கணவன் அயலில் உள்ள வண்டில் ஒன்றைக் கொண்டு வந்து மனைவியை ஏற்றினார் என்றும் வண்டில் சில்லு சேற்றில் புதைந்தபோது கணவர் கீழே இறங்கிய சமயமே அவரும் பாம்பினால் கடியுண்டார் என்றும் கூறப்படுகிறது.

(இ-117)

# நிவாரணம் வழங்குவதற்கும் உணவு போதாத நிலையா?

யாழ்ப்பாணம், அக். 24

இன்னும் சில நாட்களுக்குள், யாழ்ப்பாண மாவட்டத்துக்குப் போதுமான உணவுப் பொருள்கள் கொண்டு வரப்படாவிட்டால், நிவாரணமாக உணவுப் பொருள்களை வழங்க முடியாதநிலை உருவாகக் கூடும்.

யாழ்ப்பாணம் செயலக உயர்வட்டாரங்களில் இவ்வாறு அச்சம் தெரிவிக்கப்பட்டது.

கப்பல் மூலம் கொண்டு வரப்படும் பொருள்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நிவாரணமாகவும், பங்கீட்டு அட்டைக்கும் வழங்கப்பட்டுவருவது தெரிந்ததே.

ஒன்பது தடவைகள் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட உணவுப்பொருள்கள் மக்களுக்கு நிவாரணம் வழங்கிய வகையால் முடிவடைந்து விட்டதாகவும்-

3 ஆம் சட்ட விநியோகத்துக்கு உணவுப்பொருள்கள் போதாமல் இருந்ததால் தற்சமயம் பருத்தித்துறையில் இறக்கப்படும் பொருள்களில் இருந்து விநியோகிக்கப்படுவதாகவும்- அந்த வட்டாரங்கள் தகவல் தந்தன.

பருத்தித்துறையில் இப்போது கப்பல்களில் இருந்து இறக்கப்படும் பொருள்கள் மட்டுமே கையிருப்பு என்றும்-

அவை 4 ஆம் கட்ட நிவாரணத்துக்கு போதுமானதாக இல்லை என்றும்- அந்த வட்டாரங்கள் மேலும் விவரித்தன.

மழைக்காலம் வந்துவிட்டதால் காற்றுக் காரணமாக பருத்தித்துறையில் கப்பலில் இருந்து பொருள்களை இறக்குவதில் தாமதம் ஏற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

[அ 3]

# இணைந்த மாகாண சபைக்கு முஸ்லிம் கட்சிகள் இணக்கம்

கொழும்பு, அக். 24

வடக்கு - கிழக்கு மாகாண சபை, இணைந்த சபையாகவே இருக்கவேண்டும் என்பதில் தமிழ்க் கட்சிகளுக்கும், முஸ்லிம்கட்சிகளுக்கும் இடையில் அடிப்படையில் இணக்கம் காணப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

கிழக்கு மாகாணசபை தனியாக இயங்கவேண்டும் என்று கோரிவந்த முஸ்லிம் கட்சிகள் தமது நிலையை விட்டுக் கொடுக்க முன்வந்திருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒரே வடக்கு - கிழக்கு மாகாணசபையின்கீழ்இரண்டு இன மன்றங்கள் உருவாக்கப்படவேண்டும் என்றும் —

தமிழர்களுக்கான மன்றமும், முஸ்லிம்களுக்கான மன்றமும் தனித்தனியே இயங்கவும், அவை வடக்கு - கிழக்கு மாகாணசபையில் தங்கியிருந்து அதன் அனுசரணையுடன் இயங்கவும் வகைசெய்யப்படவேண்டும் என்றும் —

இணக்கம் காணப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு மத்திய அரசு வழங்க வேண்டிய அதிகாரங்கள்குறித்தும் தமிழ்-முஸ்லிம் அரசியல் கட்சிகள் கலந்து பேசியுள்ளதாகத் தெரிகிறது.

வடக்கு - கிழக்கு மாகாண சபை சம்பந்தமாக இறுதி முடிவு எடுக்கும் பொருட்டு தமிழ் - முஸ்லிம் அரசியல்கட்சிகள் நேற்று மீண்டும் கூடவிருந்தன.

**புதியவரி அதிகாரம்**

இதேவேளை —

முத்திரைவரி, மோட்டார் போக்குவரத்துக் கட்டணவரி வியாபார மொத்தவரி. மதுபானவரி, லொத்தர் வரி என்பனவற்றை அறவிடும் அதிகாரத்தை மாகாண சபைகளுக்கு மாற்றுவதற்கு அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக அறியவந்தது

இதற்கு வகைசெய்யும் விதத்தில் புதிய சட்டமூலம் ஒன்றைத் தயாரிக்குமாறு சட்ட மாஅதிபர் திணைக்களம் கேட்டுள்ளதாம்.

[அ]

# இந்திய நாடாளுமன்றில் கூட்டணிகளின் நிலை

புதுடில்லி, அக். 24

தற்போது இந்திய நாடாளுமன்றத்தில் தேசிய முன்னணியும் அதன் தோழமைக் கட்சிகளும், மற்றும் இந்திரா காங்கிரஸும் அதன் தோழமைக் கட்சிகளும் வைத்துள்ள ஆசனங்களின் எண்ணிக்கை வருமாறு:-

**தேசிய முன்னணியும் தோழமைக் கட்சிகளும் :**

| | | |
|---|---|---|
| தேசிய முன்னணி | — 144 | |
| பாரதீப ஜனதா கட்சி | — 86 | |
| இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மாக்ஸிய கம்யூனிஸ்ட் | — 43 | |
| ஏனைய தோழமைக் கட்சிகள் | — 11 | |
| மொத்தம் | — 284 | 284 |

**இந்திரா காங்கிரஸும் தோழமைக் கட்சிகளும் :**

| | | |
|---|---|---|
| இந்திரா காங்கிரஸ் | — 194 | |
| அ. தி மு க | — 11 | |
| ஏனைய தோழமைக் கட்சிகள் | — 4 | |
| மொத்தம் | — 209 | 209 |
| மற்றைய உதிரிக் கட்சிகள் | — 36 | 36 |
| நாடாளுமன்றத்தில் மொத்த எம். பிக்கள் | | 529 |

(அஸாம் நீங்கலாக)

# மரண அறிவித்தல்கள்

## அப்பாக்குட்டி இராசையா

சரவணை மேற்கைச் சேர்ந்த அப்பாக்குட்டி இராசையா 20-10 90 சனிக்கிழமை காலமானார். இவர் இராசையா நல்லம்மாவின் அன்புக் கணவரும், திரு. சிந்துராசா [பிரபல வர்த்தகர், கொழும்பு], திரு. விவேகானந்தன் [ஜேர்மன்]. திரு. சிவானந்தன் [பிரான்ஸ்], காலஞ்சென்ற ரவீந்திரன், திருமதி ஜெயகௌரி குலசிங்கம், திரு. சுத்தானந்தன் [சுவிஸ்] ஆகியோரின் அருமைத் தந்தையாரும், சி பர்வதபத்தினி, சி. மகேஸ்வரி, இ யோகமலர், இ. நிர்மலாதேவி, ந குலசிங்கம் [அஞ்சல் அதிபர், யாழ்ப்பாணம்], சு. ஞானலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சொர்ணம்மா, சொக்கலிங்கம், காலஞ்சென்ற கண்ணம்மா, கணபதிப்பிள்ளை [மலேசியா], திருமதி கமலம்மா ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 21-10 90 ஞாயிற்றுக்கிழமை சரவணையில் நடைபெற்றது.

தகவல்:
குடும்பத்தினர்.

சரவணை மேற்கு,
வேலணை.

[14548]

## வி. எம். பேரம்பலம்

காரைநகரைச் சேர்ந்த வி. எம். பேரம்பலம் (பட்டயக் கணக்காளர்; வி. எம். பேரம்பலம் அன் கம்பனி பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தின் பங்காளர்) ஆஸ்திரேலியாவில் 20-10-90 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி முருகேசு-சுந்தரம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி. சண்முகத்தின் அன்பு மருமகனும், சௌபாக்கிய கௌரியின் அன்புக் கணவரும், திருமதி ஞானவதி கனகலிங்கம், சுமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், க. கனகலிங்கத்தின் (லண்டன்) அன்பு மாமனாரும், யாழ் - கொழும்பு பிரபல வர்த்தகர்களான காலம் சென்ற வி. எம். சண்முகம், காலம் சென்ற வி.எம். பரயநாதன், திருமதி பொன்னம்மா வேலுப்பிள்ளை, வி. எம். கந்தையா (ஓய்வு பெற்ற வருமானவரி மதிப்பீட்டாளர்), திருமதி செல்லம்மா யோகரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், டாக்டர் சிவானந்தன் (மலேசியா), திருமதி சௌந்திரகௌரி செல்வரட்ணம், டாக்டர் சர்வானந்தா (மலேசியா), டாக்டர் பிரபானந்தா (மலேசியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஆஸ்திரேலியாவில் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறும்.

தகவல்:
திருமதி S. யோகரட்ணம்

(C / 5332)

# கீரிமலையில் குண்டு வீச்சு

தெல்லிப்பளை, அக். 24

கீரிமலைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

(ஓ-3-68)

**திங்கள்...**

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

உயர்ந்தது.

நேற்று முன்தினம் கபிலன். திலீப், மதுபாலன் (தொண்டமானாறு), நிர்மலன், ராஜசேகர் (விக்னேஸ்வரன்- திருமலை), பெண்புலி ஜெயா (கனகராசா லதா- வல்வெட்டித்துறை) ஆகியோர் வீர மரணம் அடைந்தனர்.

நேற்று இடம்பெற்ற மோதலில் பெண்புலி கமலா வீர மரணம் அடைந்தார். (உ)

**பெரும்பான்மை...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமது கட்சி இதுவரை வழங்கி வந்த ஆதரவை இப்போது வாபஸ் வாங்கிக் கொண்டு விட்டதாகத் தூதுக் குழு ஜனாதிபதியிடம் தெரிவித்தது. இது சம்பந்தமான கடிதம் ஒன்றையும் தூதுக் குழு ஜனாதிபதியிடம் கையளித்தது.

**மூன்று---**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பான்மை பலம் உண்டு.

— இப்படி பிரதமர் வி.பி. சிங் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

''பாரதீய ஜனதா கட்சி தனது ஆதரவை விலக்கிக் கொண்டது உண்மையானால் அரசு தனக்குரிய பலத்தை நாடாளுமன்றத்தில் நிரூபிக்கவேண்டும்'' — என்றார் அவர். (உ-எ)

# வீடு பார்க்கச் சென்றோர் படையினரிடம் சிக்கினரா?

தெல்லிப்பளை, அக். 24

கட்டுவன், குரும்பசிட்டி, குப்பிளான் பகுதிகளுக்கு தமது வீடுகளைப் பார்க்கவும், உடைமைகளை எடுத்து வரவும் சென்ற சிலர் படையினரிடம் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

சுமார் முப்பது பேர் வரையில் கடந்த சில தினங்களில் இப்பகுதிகளுக்குச் சென்று நேற்று மாலை வரை திரும்பி வரவில்லை என அறிய வந்தது.

சம்பந்தப்பட்டவர்களது உறவினர்கள் மல்லாகம் சந்தியில் நேற்று மாலையும் அவர்களது வரவை எதிர்பார்த்து கவலையுடன் காத்திருந்தனர்.

கட்டுவன் பகுதியைச் சேர்ந்த கந்தையா தம்பிப்பிள்ளை [65 வயது], திரு நாவுக்கரசு [இளைப்பாறிய பொலீஸ்], வைரவநாதன் பரமநாதன் [43 வயது] சேது தனபாலன் [26 வயது] ஆகியோரும் இதுவரை திரும்பி வராத சிலரில் அடங்குவர்.

(ஓ-3-5)

# படையினரிடம் சிக்கியோர் பணயக் கைதிகள் ஆயினரா?

தெல்லிப்பளை, அக். 24

பலாலி, காங்கேசன்துறைப் பகுதிகளில் இராணுவம் முன்னேறிய இடங்களுக்குள் அகப்பட்டுக் கொண்ட மக்கள் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனரா?

அப்பகுதிகளில் இருந்து தப்பி வந்த சிலர் அவர்கள் படையினரால் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்;

தையிட்டி, முலவைப் பகுதிகளில் மட்டும் நாற்பதுக்கு மேற்பட்டவர்கள் படையினரிடம் அகப்பட்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது.

இவர்களை அங்கிருந்து மீட்டுத் தருமாறு செஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஓ-3-5-117)

**பலாலி முகாம் மோதல்...**

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வர் ஆலயம் மற்றும் பல வீடுகளில் முகாமிட்டுள்ள படையினரும்—

வீமன்காமம் வெங்காயச் சங்கத்தில் முகாமிட்டுள்ள படையினரும்—

வீமன்காமம் மகாவித்தியாலயம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆகிய பகுதிகளில் முகாமிட்டுள்ள படையினரும்—

வெளியேற முயன்ற சமயம் விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடத்தினர்.

இதனால் படையினரின் வெளியேறும் முயற்சியும் முறியடிக்கப்பட்டது.

வலி. வடக்கில் நேற்றுக் கடுமையான ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களும் இடம்பெற்றன. (உ-3-5-68)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 24 - 10 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org